# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 112/2018

## Deposition of Witness for : PW 6

| | |
|---|---|
| **Name** | : திரு. பச்சைமுத்து |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06-01-2024.**

**(A1 and A2 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது சிறுநாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்து போன செல்வத்தை தெரியும். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு பொன்னுசாமிக்கும், செல்வத்திற்கும் நிலம் சம்மந்தமாக தகராறு இருந்தது. சம்பவத்தன்று செல்வத்திற்கு தலையில் பலத்த காயம் பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆஜர் எதிரிகளை சிறுநாத்தூர் கூட்ரோடு அருகே கைது செய்தார்கள். அப்போது நானும், சாட்சி திருமலை என்பவரும் அங்கு இருந்தோம். போலீசார் எதிரிகளை விசாரித்தார்கள் எதிரிகள் சொன்ன வாக்குமூலத்தில் தான் நான் கையெழுத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6. காரியமங்கலம் கிராமத்திற்கு போலீசார் எதிரிகளை அழைத்து கொண்டு எங்களுடன் சென்றார்கள். அங்கு 1ம் எதிரி பொன்னுசாமி கருங்கல்லை (அது ஏற்கனவே சா.பொ.2 ஆக குறியீடு செய்யபட்டுள்ளது) எடுத்து ஆஜர் செய்தார். என்னிடம் காட்டப்படும் கருங்கல் தான் அது. அதனை போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ7. அதில் நானும், சாட்சி திருமலையும் கையெழுத்து போட்டோம். செல்வம் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு சென்று இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- பச்சைமுத்து

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.